**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 01-04-2022**

**திருச்சிராப்பள்ளி(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-04-01 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-04-02 | 2022-04-03 | 2022-04-04 | 2022-04-05 | 2022-04-06 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 38.0 | 38.0 | 39.0 | 39.0 | 39.0 |
| டிமின் (° C) | 26.0 | 26.0 | 27.0 | 27.0 | 27.0 |
| RH I (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| RH II (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கிமீ) | 8.0 | 8.0 | 8.0 | 8.0 | 8.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 140 | 110 | 110 | 110 | 90 |
| மேகக்கணி (ஆக்டா) | 4 | 2 | 2 | 2 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

இந்த வாரத்தில் மழை எதிர்பார்க்கப்படவில்லை. சராசரி ஈரப்பதம் (காலை & மாலை), அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே (70.0% & 50.0%), 39.0°C மற்றும் 27.0°C என எதிர்பார்க்கப்படுகிறது. வானம் தெளிவாக காணப்படும். காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 8.0 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், அதிகபட்சமாக 20.0 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று கிழக்கு மற்றும் வடகிழக்கு திசையில் வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் மழை அளவானது இந்த வாரம் (03.04.2022 முதல் 09.04.2022 வரை) சராசரியாக பொழிய வாய்ப்புள்ளது (0.74 மி.மீ. லிருந்து 0.93 மி.மீ.)

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

நிலவும் அதிக பகல் வெப்பநிலையால் கால்நடைகளுக்கு போதுமான அளவு சுத்தமான தண்ணீர் கொடுக்க வேண்டும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கருப்பு கிராம் | உளுந்து பயிருக்கு பல்ஸ் ஒண்டெர் பூஸ்டரினை ஏக்கருக்கு 2 கிலோ என 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் பருவத்தில் தெளிக்கவும். கூடுதலாக ஒட்டும் திரவம் சேர்த்து கொள்ளவும். பயன்கள்: பூக்கள் உதிர்வது குறையும், பயிறு விளைச்சல் 20 சதம் வரை கூடும் மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும். |
| அரிசி | தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலையில் நெற்பயிரில் இலைச் சுருட்டுப்புழு தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த டிரைக்கோகிரேம்மா கிலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணிகளை) பயிர் நடவு செய்து 37, 44, மற்றும் 51 நாட்களில் மொத்தம் மூன்று முறை @ 5 சிசி (1 லட்சம் முட்டை ஒட்டுண்ணிகள்/எக்டர்/முறை) என்ற அளவில் விட வேண்டும். |
| கரும்பு | கரும்பு பயிருக்கு கரும்பு பூஸ்டரினை ஏக்கருக்கு 1, 1.5 மற்றும் 2 கிலோ முறையே என 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கரும்பு நட்ட 45, 60 மற்றும் 75 ஆவது நாட்களில் பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தெளிக்கவும். கூடுதலாக ஒட்டும் திரவம் சேர்த்து கொள்ளவும். பயன்கள்: இடைக்கணுக்களின் நீளம் கூடும், கரும்பின் வளர்ச்சி மற்றும் எடை அதிகரிக்கும், விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும், சர்க்கரை கட்டுமானம் கூடும் மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும். |
| பஞ்சு | பருத்தி பயிருக்கு காட்டன் ப்ளஸ் பூஸ்டரினை ஏக்கருக்கு 2.5 கிலோ என 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தெளிக்கவும். கூடுதலாக ஒட்டும் திரவம் சேர்த்து கொள்ளவும். பயன்கள்: பூ மற்றும் சப்பைகள் உதிர்வது குறையும், காய்கள் முழுமையாக வெடித்து சீரான அறுவடைக்கு வழி வகுக்கிறது, விளைச்சல் 18 சதம் வரை அதிகரிக்கும் மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும். |
| பஞ்சு | பருத்தியில் வேரழுகல் மற்றும் வாடல் நோய்க்கு மருந்தாக 0.1% கார்பென்டசிம் கொண்டு செடிகளின் தூர்களில் ஊற்றி மண்ணை நனைக்கவும். |
| சோர்கம் ( ஜோவார் / கிரேட் மில்லெட் ) | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக அசுவினியின் தாக்கம் சோளத்தில் அதிகம் ஏற்படக்கூடும். எனவே, இதனைக் கட்டுப்படுத்த டைமீத்தோயேட் 30 EC 500 மி.லி/ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| சோளம் | மக்காச்சோள மேக்சிம் பூஸ்டரினை மக்காச்சோள பயிருக்கு ஏக்கருக்கு 3 கிலோ என 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆண் மஞ்சரி மற்றும் மணி உருவாகும் பருவத்தில் தெளிக்கவும். கூடுதலாக ஒட்டும் திரவம் சேர்த்து கொள்ளவும். பயன்கள்: மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும், விளைச்சல் 20 சதம் வரை கூடும் மற்றும் வறட்சியை தாங்கி வளரக்கூடும். |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நிலக்கடலை | நிலக்கடலை ரிச் பூஸ்டரினை நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு 2 கிலோ என 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் மட்டும் காய் பிடிக்கும் தருவாயில் தெளிக்கவும். கூடுதலாக ஒட்டும் திரவம் சேர்த்து கொள்ளவும். பயன்கள்: அதிக பூ பிடிக்கும் திறன், குறைந்த பொக்கு கடலைகள், விளைச்சல் 15 சதவீதம் கூடும் மற்றும் வறட்சியை தாங்கி வளரக்கூடும். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் சுருள் பூச்சியை கட்டுப்படுத்த விளக்குக்கவர்ச்சி பொறியை எக்டர்க்கு 12 வீதம் அமைத்து அந்துப்பூச்சியை கவர்ந்து அழிக்கலாம். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் இலை தத்துப் பூச்சியை கட்டுப்படுத்த அவரை செடியினை ஊடுபயிராக 1:4 விகிதத்தில் நடவு செய்யவும் மற்றும் இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எல் மருந்தினை 100 மி.லி./ஹெக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் அசுவினி பூச்சியை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எல் மருந்தினை 100 மி.லி./ஹெக்டர் என்ற அளவில் தெளிக்கவும். நிலக்கடலையில் இலைப்பேன் பூச்சியை கட்டுப்படுத்த குவினல்பாஸ் 25 இசி மருந்தினை 1400 மி.லி./ஹெக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தேங்காய் | தென்னை டானிக்: ஒரு வருடத்திற்கு இரண்டு பாக்கெட் (200 மி.லி.) டானிக்கை 6 மாத இடைவெளியில் வேர் மூலம் கொடுக்க வேண்டும். பயன்கள்: பச்சையம் அதிகரிக்கும், ஒளிச்சேர்க்கை திறன் கூடும், பாளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும், குரும்பை கொட்டுதல் குறையும், காய்கள் பெரிதாகி பருப்பு எடை கூடும், விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும் மற்றும் பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தி கூடும். |
| வாழை | வரும் நாட்களில் மிதமான முதல் பலமான காற்றுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதால் உழவர்கள் சவுக்கு குச்சிகளை பயன்படுத்தி வாழை பயிர்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| வெங்காயம் | வயலைச் சுத்தமாகவும், சீரான இடைவெளியில் களை எடுப்பதன் மூலம் இலைப் பேனைக் கட்டுப்படுத்தலாம். பூச்சித் தாக்கப்பட்ட வயல்களை வெள்ளைப் பாசண முறை செய்ய வேண்டும். டைமீத்தோயேட் 30 இசி மருந்தினை 1.3 மி.லி./லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிபுற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும். |
| ஆடுகள் | வெள்ளாடுகளை விட செம்மறியாடுகளையே அதிகம் தாக்குகிறது. உதடு, மூக்கு, கண் இமை, காது, காலின் அடிப்பகுதி, மடி, இனப்பெருக்க உறுப்பு போன்ற இடங்களில் முத்துப்போன்ற அம்மைக் கொப்புளங்கள் காணப்படுதல் காய்ச்சல், உணவு உட்கொள்ளாமை போன்ற பிரச்சனைகள் ஏற்படும். செம்மறியாடுகளுக்கான தடுப்பூசி 3 - 6 மாத வயதில் ஆண்டுக்கு ஒரு முறை செலுத்த வேண்டும். |
| பசு | தற்போது நிலவும் வெப்பநிலையில் கால்நடைகளை குளிப்பாட்டிய பிறகு காலை 11 மணிக்குள் செயற்கை கருத்தரிப்பு முறையினை மேற்கொள்ள வேண்டும். பால் கறக்கும் விலங்குகள் மற்றும் எருமைகளுக்கு அவற்றின் உடலில் தண்ணீர் தெளிக்கவும். கால்நடைகள் தானாக முன்வந்து குடிப்பதற்கு போதுமான குடிநீர் வைக்கவும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் கோழிகளில் வெப்ப அயற்சி ஏற்படுவதை தவிர்க்க கோழி பண்ணைகளில் இரு ஓரங்களிலும் நனைந்த சாக்கை கட்டி விட வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | தற்போது நிலவும் வானிலையில் கோழிகளில் ஏற்படும் வெப்ப அயற்சியை தடுக்க காலை மற்றும் மாலை வேளைகளில் தீவனம் கொடுக்க வேண்டும். |
| பொது ஆலோசனை | காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டம் உரமிடுதல் நல்ல பயனளிக்கும். பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை நீர் பாசனம் வழி விடுதல் அல்லது இலைவழியாக தெளிக்கவும். |
| பொது ஆலோசனை | விற்பனைக்கு: த.வே.ப.க. பயிர் பூஸ்டர்ஸ்: பயறு ஒண்டெர், கரும்பு பூஸ்டர், மக்காச்சோள மேக்ஸிம், நிலக்கடலை ரிச் மற்றும் பருத்தி பிளஸ். த.வே.ப.க. டானிக்: தென்னை டானிக். தொடர்புக்கு: 6381186765 |